உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 5. Vol 5. | விக்கிரமஹூ ஆனி மீ 1உ ஜூன் மீ-1940 | இதழ் 3 No 3

திருப்புகழ்

திருவேரகம் (சுவாமி மலை)

இருவினை புனைந்துஞான விழிமுனை திறந்துநோயி
னிருவினை யிடைந்துபோக மலமுட
இருளற விளங்கியாறு முகமோடு கலந்துபேத
மிலையென இரண்டுபேரு மழகான
பரிமள சுகந்தவீத மயமென மகிழ்ந்துதேவர்
பணியவிண் மடந்தைபாத மலர்தூவப்
பரிவுகோ டனந்தகோடி முநிவர்கள் புகழ்ந்துபாட
பருமயி லுடன்குலாவி வரவேணும்
அரியய னறிந்திடாத அடியிணை சிவந்தபாதம்
அடியென விளங்கியாடு நடராஜன்
அழலுறு மிரும்பின்மேனி மகிழ்மர கதம்பெணுகம்
அயலணி சிவன்புராரி யருள்சேயே
மருவலர்கள் திண்பணுர முடியுடல் நடுங்கஆவி
மறலியுண வென்றவேலை யுடையோனே

வளைகுல மலங்குகாவி ரியின்வடபுறஞ்சுவாமி
மலைமிசை விளங்குதேவர் பெருமாளே.

பதவுரை:

அரி அயன் அறிந்திடாத - நாராயணரும் நான்முகரும் தேடித் தேடிக் காண முடியாமற் போன, அடியிணை - இரண்டு திருவடிகளை யுடையவரும், சிவந்த பாதம் அடி என - செந்நிறம் பொருந்திய தமது தூக்கிய திருவடியே உலகங்களுக் கெல்லாம் முதன்மையானதென்று விளக்கி, விளங்கி ஆடும் - பேரருட் பெருஞ்சோதி வடிவாக விளங்கி ஆநந்தத் தாண்டவம் புரிந்தருளும், நடராஜன் - அம்பலக் கூத்தரும், அழல் உறும் இரும்பின் மேனி - நெருப்பில் இடப்பட்டுச் சிவந்தொளிரும் இரும்பைப் போன்ற தமது பொன்மேனியைக் கண்டு, மகிழ் - உள்ளம் உவக்கின்ற, மரகதம் பெண் - மரகதம் போன்ற பச்சை மேனியை யுடைய உமையம்மையாருடைய, ஆகம் அயல் அணி - திரு மேனியை பக்கத்தில் இருத்திக் கொண்டவரும், சிவன் - மங்கலத்தை யருள் பவரும், புராரி - திரிபுரத்தை யெரித்தவரும் ஆகிய பரமேசுவரர், அருள் சேயே - பேரருட் பெருக்கால் பெற்றருளிய, திருக்குமாரரே! மருவலர்கள் - பகைவர்களாகிய அசுரர்களுடைய, திண் பண் ஆர முடி உடல் நடுங்க - வலி பெற்று அலங்காரமாகவுடைய நவரத்தின மாலைகளுடன் கூடிய தலைக ளும் உடல்களும் பயத்தினால் நடுநடுங்கவும், ஆவி மறலி உண - அவர்க ளுடைய உயிரைக் கூற்றுவன் குடிக்கவும், வென்ற - வெற்றி பெற்ற, வேலை - வேற்படையை, உடையோனே - கரத்திலே தாங்கியிருப்பவரே! வளை குலம் - சங்குகளின் கூட்டம், அலங்கு - ஒளி வீசுகின்ற, காவிரியின் வட புறம் - காவிரியாற்றின் வடதிசையில் விளங்குகின்ற, சுவாமி மலை மிசை விளங்கு - சுவாமிமலை யென்கின்ற திருவேரகத்தில் அடியார் பொருட்டு எழுந் தருளியுள்ள, தேவர் பெருமாளே - தேவர்களுக்கெல்லாம் தலைவராகிய பெரு மிதமுடையவரே! இருவினை புனைந்து - பெரிய செயலாகிய சிவயோகத்தை மேற்கொண்டு, ஞான விழி திறந்து - அறிவுக் கண்ணாகும் நெற்றியிலுள்ள நந்திச் சுழி திறக்கப் பெற்று, நோயின் இருவினை இடைந்து போக - (அவ் வறிவுக் கண் திறக்கப் பெற்றதனால்) பிறவிப் பிணிக்குக் காரணமாயுள்ள நல் வினை தீவினை யென்ற இருவினைகளும் என்னைவிட்டுப் பின் வாங்கி ஓடிப் போகவும், மலம் மூட இருள் அற விளங்கி - அறியாமைக்குக் காரணமாயுள்ள ஆணவ மலமாகிய இருள் மலம் தேய்ந்து போகவும் அதனால் மெய்ஞ்ஞான ஒளி வீச விளக்கமுற்று, ஆறு முகமோடு கலந்து - தேவரீருடைய ஆறு திருமுகங்க ளின் திருவருட் பெருக்கில் கலப்புற்று, இரண்டு பேரும் பேதம் இலை என - பரமான்மாவாகிய தேவரீரும் ஜீவான்மாவாகிய அடியேனும் இரண்டெனுந் தன்மை நீங்கிக் கலந்து அத்துவிதமாகி, அழகு ஆன - அழகிய, பரிமள சுகந்த

வீத மயம் என மகிழ்ந்து - நல்ல வாசனையுடைய மலரும் அதில் வீசும் மண மும் போல் ஒன்றி பேரின்பமுற்று, தேவர் பணிய - தேவர்கள் வணங் கவும், விண் மடந்தை - ஆகாய வாணி, பாதம் மலர் தூவ - திருவடிகளின் மேல் கற்பக மலரைச் சொரியவும், பரிவு கொடு - மிக்க அன்பு கொண்டு, அநந்த கோடி முனிவர்கள் - எண்ணிறந்த பல் கோடி முனி புங்கவர்கள், புகழ்ந்து பாட - புகழ்ந்து பாடவும், பருமயில் உடன் குலாவி வர வேணும் - பெரிய மயில் வாகனத்தின் மீது ஊர்ந்து உல்லாசமாக நாம் உலாவி வர வேணும்.

பொழிப்புரை.

திருமாலும் திசைமுகனும் தேடித் தேடி யறிதற் கரிதான இரண்டு திருவடிகளை யுடையைவரும், தமது தூக்கிய செம்மலர் நோன்றாட் கமலமே உலகங்களுக் கெல்லாம் முதன்மையான தென்று விளக்கி அருட் பெருஞ் ஜோதியாக ஆநந்தத் தாண்டவம் புரிந்தருளும் நடராஜப் பெருமானும், நெருப்பிலிட்டு மிகமிக ஒளிரும் இரும்பைப் போன்ற செம்மேனியைக் கண்டு மகிழ்கின்ற, மரகத மேனியை யுடைய மலைமகளை அருகில் இருத்திக் கொண்டிருப்பவரும், மங்கலத்தை யருள்பவரும், திரிபுர தகனரும் ஆகிய சிவபெருமான் உலகங்கள் உய்யும் பொருட்டுப் பெற்றருளிய திருப்புதல்வரே! பகைவர்களாகிய அசுரர்களுடைய வலிபெற்று அலங்காரமாகவுடைய மணி மாலைகளுடன் கூடிய தலை உடல் இவைகள் அச்சத்தினால் நடுங்கவும், அவர்களுடைய உயிரை இயமன் உண்ணவும் வெற்றி பெற்ற வேலாயுதத்தைப் படைக் கலமாக உடையவரே! சங்குகளின் கூட்டம் உருண்டு ஒளி செய்கின்ற காவிரிநதியின் வட புறத்தில் விளங்குகின்ற சுவாமிமலை யென்னுந் திருவேரகத் திருப்பதியில் எழுந்தருளி யுள்ள தேவர் தலைவரே! அடியேன் பெரிய செயலாகிய சிவயோகத்தை மேற்கொண்டு அறிவுக் கண்ணாகும் புருவ மத்தியிலுள்ள நந்திச் சுழி திறக்கப் பெற்று, அதனால் பிறவிப் பிணிக்குக் காரணமாயுள்ள நல்வினை தீவினை யென்னும் இரு வினைகளும் பயந்து பின்வாங்கி யோடிப்போகவும், அறியாமைக்குக் காரணமாயுள்ள ஆணவமென்னும் இருள் மலம் தேய்ந்தழியவும், அதனால் ஞான வொளி வீசப் பெற்று விளக்கமுற்று, தேவரீருடைய ஆறு திருமுகங்களின் கருணைப் பிரவாகத்தில் கலந்து, பரமான்மாவாகிய தேவரீ

ரும் ஜீவான்மாவாகிய அடியேனும் நல்ல மணம் வீசும் மலரும் அதன் மணமும்போல இரண்டற்று அத்துவிதமாகக் கலந்து, தேவர்கள் வந்து வணங்கவும், விண்மாது திருவடிமேல் கற்பக மலர்மாரி பொழியவும், எண்ணிறந்த பலகோடி முனிவர் குழாங் கள் மிக்க அன்பு கொண்டு புகழ்ந்து பாடவும், பெரிய மயிற்பரி யின் மீது ஆரோகணித்து உல்லாசமாக உலாவி வரவேணும்.

விரிவுரை.

இருவினை:—

இரு - பெரிய, வினை - செயல்; பெரிய செயலாவது சிவ யோகம்.

"செனித்த காரி யோபாதி யொழித்து ஞான ஆசார
சிரத்தை யாகி யான்வேறெ னுடல்வேறு
செகத்தி யாவும் வேறாக நிகழ்ச்சி யாம னோதீத
சிவச்சொ ரூப மாயோகி என ஆள்வாய்"
—திருப்புகழ்

இது பல பிறவிகளில் சரியை கிரியைகளைச் செய்து அதன் முதிர்ச்சியினால் வருவது ஆதலினால் பெரிய செயல் என்றனர்.

ஞானவிழிமுனை திறந்து:—

நமக்கு மூடப்பெற்றிருக்கின்ற ஞானவிழி சிவயோகிகட்கு திறக்கப்படும். எல்லாவற்றையும், எல்லாக்காலத்தையும் எல்லாப் பொருள்களையும் அறிகின்ற தடைபடாத ஞானமுண்டாகும்.

இருவினை இடைந்து போக:—

பிறவிக்குக் காரணமாயுள்ளது நல்வினை தீவினைகளாகிய இரண்டேயாம். அது சமமுற்றபோது இறைவன் திருவருட் காட்சி யுண்டாகும்.

"உணக்கி லாததோர் வித்துமேல் விளையாம லென்வினை ஒத்தபின்
கணக்கிலாத் திருக்கோல நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே"
—மணிவாசகர்

"இருவினை யின்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து
வருவது போவ தாகும்"

—சித்தியார்

மலமூட இருள்:—

ஆணவ இருள் பூதஇருளினும் மிக்க வலியுடைத்து. எல்லாப் பொருளையும் மறைக்கும் பூத இருள், தன்னைக் காட்டி நிற்கும்; ஆணவ இருள், தன்னையுங் காட்டாது; தான் மறைத்த ஆன்மாவையுங் காட்டாது; பிறபொருளையுங் காட்டாது.

"ஒரு பொருளுங் காட்டா திருளுருவங் காட்டும்
இருபொருளுங் காட்டா திது"

—திருவருட்பயன்

ஆறுமுகமொடு கலந்து பேதமில்லையென:—

சீவன் இருவினையொப்பு கைவரப்பெற்று மலநிவிர்த்தியானவுடன் சத்தி பதிந்து சிவத்துடன் இரண்டறக் கலந்து பூரண இன்பத்தைத் துய்க்கின்றது.

"ஊனங்க ளுயிர்கள் மோக நானென்ப தறிவிலாமல்
ஓமங்கி யுருவ மாகி யிருவோரும்
ஓரந்த மருவி ஞான மாவிஞ்சை முதுகி னேறி
லோகங்கள் வலம தாட அருள்தாராய்"

—திருப்புகழ்

அங்ஙனம் அத்துவிதமுற்று, தேவர் பணியவும், விண் மடந்தை தண்மலர் தூவவும், முனிவர்கள் புகழ்ந்து பாடவும் மயில் வாகனத்தின் மீது இன்பமாக லோகமெல்லாம் உலாவிவர வேண்டும் என்று வேண்டுகின்றார்.

"நீவேறெ னாதி ருக்க நான்வேறெ னாதி ருக்க
நேராக வாழ் வதற்கு னருள்கூர"
"இருவினை மு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுகம் அதனையருள்"

என்ற சுவாமிகளது பிற திருவாக்குகளும் இங்கே நினைவுக்கு வருகின்றன.

அரியயன் அறிந்திடாத அடியிணை:—

சிவபெருமானுடைய திருவடியை திருமாலே தேடினாராயினும், முடியைத் தேடிக்காணாது அயர்ந்த பிரமதேவராலும் காணமுடியாதது அத்திருவடி என்பது தேற்றமாம்.

யாம் காண்பேம் என்று அகந்தையுற்றார் யாவரேயாயினும், அவனது திருவடித் தாமரையைக் காணுதற்கு முடியாது. அன்பு நெறி ஒன்றினாலேயே அவனை எளிதிலுணரலாம். அப் பரமபதி விண்ணோர்களேத்த மறைந்திருப்பன்; கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச் சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நிற்பன். திருமால் தேடித் தேடி யிளைத்து நின்றதை மணிவாசகர் கூறும் அழகினைக் காண்க.

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடியாலே மூவுலக ளந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடி யறியும் ஆதர வதனிற்
கடுமுரண் ஏன மாகிமுன் கலந்து
ஏழ்தலம் உருவ இடந்துபின் எய்த்து
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்

சுவாமி மலை:—

சுவாமிமலையென்பது நான்காம் படைவீடு ஆகும். அது அநாகத க்ஷேத்திரம். திருவேரகம் என்பதும் அதுவே. சுவாமி என்ற திருநாமம் முருகவேளுக்கே யுரியது. ஏனைய தேவர்களைச் சுவாமி என்பது உபசாரமேயாம். ஸ்வாமி என்ற வடமொழிப் பதத்தில் ஸ்வம் என்பதற்கு உடைமை (சொத்து) என்பது பொருள். ஸ்வம் உடையவர் ஸ்வாமி; அதாவது உலகங்களையும் உயிர்களையும் உடைமையாக வுடையவன் எவனோ அவன் ஸ்வாமி எனப் படுவன். "அமர கோசம்" என்ற வடமொழி நிகண்டில் முருகக் கடவுளின் திருப் பெயரைக் கூறும் கோவையில்

"தேவசேனுபதிச் சூர ஸ்வாமீ கஜமுகானுஜ:"

என்று கிளத்துமாறு காண்க.

"ஸர்வாண்டாதிபஹ்தள தஸ்மின் குஹே பரம பாவனே"

என்ற வேத வசனத்தாலும் குகமூர்த்தி ஒருவரே மூவர் தேவாதிகட்கும் எல்லா உலகங்கட்கும் தனிப் பெருந் தலைவன் என்று நன்கு வலியுறுமாறு காண்க. ஆதலால் எல்லாவற்றையும் எல்லாவுயிர்களும் உடைமையாக வுடைய முருகக் கடவுள் ஒருவரே ஸ்வாமி யெனப் படுவர். ஆதலால் அவர் எழுந்தருளியுள்ள மலை ஸ்வாமிமலை எனப் படுகின்றது

கருத்துரை

சிவ புதல்வரே! வேலாயுதரே! சுவாமி மலையில் உறைபவரே! இருவினையொப்பு, மல பரிபாக முற்று, ஞான விழி திறக்கப் பெற்று, சிவயோகியாகி தேவரீருடன் அத்துவிதமுற்று மயில் மேலூர்ந்து இனிது உலவி வரவேணும்.

ஓம் குஹாய நம :

கந்தரலங்காரம்

(32வது - பக்கத் தொடர்ச்சி.)

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்த படிஇருங் கோள்எழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்கவைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே.

பதவுரை.

மனத்தை தடுங்கோள் - (அன்பர்களே!) உங்கள் மனத்தை பொறி புலன்கள் வழியே செல்ல விடாமல் தடை செய்யுங்கள், வெகுளியை விடுங்கோள் - கோபத்தை அறவே விட்டுவிடுங்கள், என்றும் தானம் இடுங்கோள் - எப்போதும் ஏழைகட்குத் தானத்தைக் கொடுத்துக் கொண்டிருங்கள், இருந்தபடி இருங்கோள் - இருந்த வண்ணமே அசைவற்று இருங்கள், (இவ்வண்ணம் செய்வீர்களானுல்) எழு பாரும் உய்ய - ஏழுலகங்களும் பிழைக்குமாறு, கொடும் கோப சூருடன் - கொடிய கோபத்துடன் கூடிய சூரபன்மனுடன், குன்றம் - கிரௌஞ்ச மலையும், திறக்க - பிளந்து அழியும்படியும், தொளைக்க - துவளபடும் படியும், வை வேல் விடும் கோன் - கூர்மை பொருந்திய வேற்படையை விடுத்தருளிய தனிப்பெருந் தலைவராகிய முருகக் கடவுளது, அருள் - திருவருளானது, தானே உமக்கு வெளிப் படும் - தானுகவே வந்து உமக்கு வெளிப் பட்டு ஆட்கொள்ளும்.

விரிவுரை.

இப்பாடலில் நமது சுவாமிகள், கற்பகோடிகாலந் தவங் கிடக்கினும், கிடைக்கப் பெருத முருகப் பெருமானுடைய திருவருள் எளிதில் கிடைப்பதற்குரிய நான்கு வழிகளை உபதேசிக்கின்றுர்; இதனை அன்பர்கள் நன்கு படித்து நினைவில் இருத்தி நடைமுறையிற் கொண்டு வரவேண்டியது மிகமிக அவசியமாம்.

தடுங்கோள் மனத்தை:—

மனமானது எந்த நேரமும் ஓய்வின்றிச் சலித்துக்கொண்டே யிருக்கின்றது. அதனை இறைவனுடைய திருவடித் தியானத்தால் ஒருமுகப்படுத்த வேண்டும்.

> ''காடுங் கரையு மனக்குரங்கு கால்விட் டோட அதன்பிறகே
> ஓடுந் தொழிலாற் பயனுளதோ''
>
> —தாயுமானுர்

மனமானது ஓடித் திரிவதால் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. அதனை யடக்குவதனுலேயே சுகம் உண்டாகின்றது. கோயில் வழிபாடு, பூசை, யோகம் முதலிய எல்லா வகையான கிரியைகளும் மனதை ஒருவழிப்படுத்தும் பொருட்டேயாம். மனமடங்காவிடில் ஏனையவைகளால் பயன் யாதுமில்லை.

> ''சினமிறக்கக் கற்ருலும் சித்தியெலாம் பெற்ருலும்
> மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே''
>
> —தாயுமானுர்

விடுங்கோள் வெகுளியை:—

மனிதனுக்குக் கோபம் பெரும் பகையாகும். ஒருவன் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமானுல் சினத்தைத் தடுக்க வேண்டும். கோபத்தைத் தடுத்தவற்கே மனம் சாந்தியடையும்.

> ''தன்னைத் தான் காக்கிற் சினங்காக்க; காவாக்கால்
> தன்னையே கொல்லுஞ் சினம்''
>
> —திருக்குறள்.

> ''கஸ்ய ந சோகோ ய: ஸ்யாதக்ரோத:''
> வினு :- யாருக்குத் துக்கமில்லை?
> விடை :- கோபமற்றவனுக்கு. — பிரச்னேத்தர ரத்னமாலிகா.

தானமென்று மிடுங்கோள்:—

அறமொன்றே மனிதனை யரண்செய்வதாம். அதனை என்றும் ஒல்லும் வகையால் செய்யவேண்டும். மறுமைக்கு வந்து உதவுவது அறவழியில் கொடுத்த பொருள் ஒன்றேயாம்.

> ''எங்காயினும் வரும் ஏற்றவர்க்கிட்டது''
> ''நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்''
> ''பகிர நினைவொரு தினையளவிலுமிலி''

இருந்தபடி யிருங்கோள்:—

இருந்தபடி யிருத்தலாவது மனோலயமுற்று, சொல்லற சும்மா இருக்கும் நிலையாம். மனதைத் தடுத்து, வெகுளி விடுத்து, உயிர்களின்மீது கருணை செய்து அன்பு வடிவாக நாளும் நல்லறம் புரியும் நல்லன்பர்கட்கு இந்நிலை வந்து சேரும். கல்லாலின் கீழிருந்து கல்வி கேள்விகளில் வல்லார்களாகிய நால்வருக்கும், வாக்கிறந்த பூரணமாய், மறைக்கு அப்பாலாய், எல்லாமாய், அல்லவுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி, எம் பெருமான் சொல்லாமற் சொல்லிய நிலையாகிய இதனை அநுபவத்தாலேயே யறிய முடியும்.

திறக்க தொளைக்க:—

திறக்க என்பதனை, சூரபன்மனுடல் திறக்க வென்றும், தொளைக்க என்பதனை, குன்றந் தொளைக்க வென்றும் கூட்டிப் பொருள் கொள்க.

தானே யுமக்கு வெளிப்படுமே:—

மேற்கூறியபடி, மனதைத் தீயவழியிற் செல்லவிடாமல் தடுத்தும், சினத்தை அறவே நீக்கியும், என்றும் அறத்தைச் செய்தும், சும்மா இருக்கும் நிலையைச் சார்ந்தும் இருப்போமேயானல், பல்கோடிகாலந் தவம் புரியினும் பெற முடியாத எந்தை கந்தவேளின் திருவருள் தானே நம்மைத் தேடிவரும்.

கருத்துரை.

உலகினரே! மனத்தைத் தடுங்கள்; சினத்தை விடுங்கள்; அறஞ் செய்யுங்கள்; சும்மா யிருங்கள். இங்ஙனஞ் செய்வீரேல் சூராதிகளேயழித்த செவ்வேட் பரமனது திருவருள் தானே உமக்கு வெளிப்பட்டுத் துணை செய்யும்.

ஓம் குஹாய நம:

சிவாநந்தலஹரீ

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(33-வது பக்கத் தொடர்ச்சி)

(63) மார்கா^{3} வர்தித பாது^{3}கா பசுபதே^{3} ரங்கஸ்ய கூர்சாயதே
க^{3}ண்டு^{3}ஷாம்பு^{3} நிஷேசநம் புரரிபோர் தி^{3}வ்யாபி^{4} ஷேகாயதே!
கிஞ்சித்ப^{4}க்ஷித மாம்ஸ சேஷக^{3}பளம் நவ்யோப ஹாராயதே
ப^{4}க்தி: கிம் ந கரோத்யஹோ வநசரோ ப^{4}க்தாவதம் ஸாயதே!!

பதவுரை.

பசுபதே:—ஈசனுடைய,
அங்கஸ்ய:—உடம்பிற்கு,
மார்காவர்தித பாதுகா — வழிகளில் கால்களில் போட்டு வழக்கப் படுத்தப் பட்ட (தேய்ந்த பழைய) செருப்பானது
கூர்சாயதே .— புருவங்களின் நடுவிடம் போலாகிறது,
புராரிபோ: — திரிபுரத்தை யெரித்த சிவபெருமானுக்கு
கண்டுஷாம்பு நிஷேசனம் — கொப்பளித்த தண்ணீரால் நனைத்தலானது
திவ்யாபிஷேகாயதே — தேவர்களுக் குரியதான (கங்கை நீர்போல்) அபிஷேகம் போலாகிறது.
கிஞ்சித் பக்ஷித மாம்ஸ சேஷ கபளம்—சிறிது கடித்துண்ட இறைச்சியின் மிகுதியான கவளமானது
நவ்யோப ஹாராயதே — புதிதான நைவேத்யம்போல் ஆகிறது
வநசர—வேடன் (கண்ணப்பர்)
பக்தாவதம் ஸாயதே—உயர்ந்த பத்தனுகின்றான் (ஆதலால்)
பக்தி:—பத்தியானது
கிம்—எதை(த்தான்)
நகரோதி—செய்யாது?
(எல்லாம் செய்யும்)

பொழிப்புரை.

நடந்து தேய்ந்த பழஞ்செருப்பு சிவபெருமானுடைய புருவமத்திய மாயிற்று; வாயில் விட்டு உமிழ்ந்த தண்ணீர் புண்ணிய தீர்த்தமாயிற்று; எச்சிற் செய்த இறைச்சித் துண்டம். புனித

மான நைவேத்யமாயிற்று. வனத்திலுள்ள வேடன் அடியார்களுக்கு முதன்மை யானவனுயினன்; ஆதலினுல் பத்தி என்பது எதைத்தான் செய்யாது? எல்லாஞ் செய்யும்.

அன்பென்னும் மலையில் உச்சியில் நிற்பவர் கண்ணப்பர் ஒருவரே. அதனுல் "கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்" என்ருர் அன்புருவாகிய ஆளுடைய அடிகள்.

"கூசாது வேடனுமிழ்தரு நீராடி யூனுணெனுமுரை
கூறும ணிய அவனுகர் தருசேடங்
கோதாமெனும லமுதசெய் வேதாகமாதி முதல்தரு
கோலோக நாத குறமகள் பெருமாளே"
—திருப்புகழ்.

குறிப்பு:--- நால்வர்களாலும் அருணகிரிநாதராலும் நக்கீரர் முதலிய பிற பெரியோர்களாலும் பாராட்டப் படுகின்றவரும், சிவபெருமானுடைய அருமைத் திருவாக்கால் "கண்ணப்பா!" என்று அழைக்கும் பேறு பெற்றவருமாகிய நமது கண்ணப்ப நாயனுருக் கென்று உயர்திரு சு. நல்லகண்ணுபிள்ளை யவர்கள் திருநெல்வேலி கிழப்புதுத்தெருவில், ஒரு அழகிய திருமடம் புதுக்கி கண்ணப்பர் திருவுருவத்தைக் காண்பார் கண்ணுங் கருத்தும் ஒருங்கே கவருங் கவினுடையதாய் அமைத்து நித்திய நைமித்திக வழிபாடுகளைச் செய்து, பல அடியார்களை திருமடத்தில் தங்குவித்து, அன்பர்களை ஆதரித்து வரும் ஒரு திருத்தொண்டு பாராட்டற் குரியது. இத்தகைய சைவத்திருவுடையாருக்கு கண்ணப்பர் திருவருளால் எல்லா நலன்களும் எய்துவதாக.

உ

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(38-வது பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு சூரபன்மன் கூறிய சொற்களைக் கேட்ட சிங்கமுகன், "நன்று நன்று: அண்ணே! இன்னமும் நான் ஒன்று சொல்வேன்; கோபஞ் செய்யற்க" என்று சொல்லுவான்.

தமக்கு ஒரு மூல காரணமில்லாத சுத்த மாயாதீதராகிய சிவபெருமான் பிறைச் சந்திரனைத் தரித்த சடையையும், பவளம் போலும் திருமேனியையும், மூன்று திருக் கண்களையும், நான்கு திருப்புயங்களையும், நீல கண்டத்தையுங் கொண்டு நின்றார். அவர் அத் திருவுருவங் கொண்டது என்ன காரணமெனில், ஐந்தொழிலைச் செய்து ஆன்மாக்களைப் பிணித்த பாசங்களை நீக்கி, வீடுபேற்றைத் தந்தருளும் படி திருவுளத்திற் கொண்ட பேரருளேயாம்.

> தன்னை நேரிலாப் பரம்பொரு டனியுருக் கொண்ட
> தென்ன காரண மென்றியே லைந்தொழி லியற்றி
> முன்னை யாருயிர் பாசங்கண் முழுவது மகற்றிப்
> பின்னை வீடுபே றருளுவா னினைந்தபே ரருளே.

இத்தகைய அப் பரம பதியை நினைத்து நெடுங்காலம் பெருந் தவத்தைச் செய்தாய். அவர் அதனைக் கண்டு வெளிப்பட்டு ஒப்பில்லாத வரங்களை வழங்கி, அதற்கு ஒழிவையுஞ் சொல்லி வைத்தார். நீ இதனை அறிந்திலை போலும்? எவராலும் பெறுதற்கரிய பெருந் திருவைப் பெற்ற நீ அறநெறியை விடுத்து தேவரைச் சிறையில் வைத்தாய். தனிப் பெருந் தலைவராகிய சிவமூர்த்தி அது கண்டு, உன்னைக் கொல்ல நினைத்து, "வரங் கொடுத்த யாமே அழிப்பது முறையன்று; வரத்தினாற் பெருமை பெற்ற சூரபன்மனைக் கொல்லுதல் பிறர்க்கும் அரிது" என்று திருவுளங் கொண்டு, தம்முடைய திருவருவாகிய ஒரு திருக்குமாரரைக் கொண்டு

கொல்ல நினைத்து, செம்மேனியும் ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருப்புயங்களுமாகத் தம்முடைய நெற்றிக் கண்ணினால் ஒரு ஒப்பற்ற திருப்புதல்வரைத் தந்தார். மானுடர்களிலும் விலங்குகளிலும் பறவைகளிலும் மற்றையோனிகளும் பிறந்து உழல்கின்றவரைப்போல் அக்குமாரரை நீ நினையாதே. அவர் பரஞ்சோதி சொரூபராகிய சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலே உதித்தார். மறைகளாலும் அறியப்படாத தலைவர்.

மானு டத்தரின் விலங்கினிற் புட்களின் மற்று
மூன முற்றுழல் யாக்கையிற் பிறந்துளா ரொப்ப
நீநி னைக்கலை பரஞ்சுடர் நெற்றியங் தலத்தே
தானு தித்தனன் மறைகளுங் கடந்ததோர் தலைவன்.

பதிஞான மில்லாதவர்களுக்கு அறிய முடியாத சிற்பரவஸ்துவாகிய அவரைப் பாலகன் என்றாய். சிறிய ஒரு ஆலம் வித்தில் அந்த விருக்ஷம் யாவும் ஒடுங்கி யிருந்து தோன்றியவாறு போல, எல்லாப்பொருளும் முன்னாளில் அவரிடத்தினின்றுந் தோன்றின.

அவர்,

அருவு மாகுவ னுருவு மாகுவ னருவு
முருவு மில்லதோர் தன்மையு மாகுவ னூழின்
கரும மாகுவ னிமித்தமு மாகுவன் கண்டாய்
பரம னடல யாவரே பகர்ந்திடற் பாலார்.

அவர் வேதங்களின் ஞானத்துக்கும், உபநிடதங்களின் ஞானத்துக்கும் காணுதற் கரியவர்; புதியர்க்குப் புதியர்; முதியர்க்கு முதியர்; முடிவிற்கு முடிவாய் முதலுக்கு முதலாய் உயிர்க்குயிராய் நின்ற நின்மலர்.

வேதக் காட்சிக்கு முபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன்
மூதக் கார்க்குமு தக்கவன் முடிவிற்கு முடிவா
யாதிக் காதியா யுயிர்க்குயி ராய்நின்ற வமலன்.

ஞானமே திருமேனியாகவுள்ள அக்குமாரக் கடவுளுடைய இயல்பு இத்தன்மைய தென்று யாலும் நீயுமாய்ச் சொல்வோமென்றால் அஃது எளிதோ? மோனநிலை நீங்காத முனிவர்களும் தெளிகிலர்; தம்முடைய பெருந்தன்மையைத் தாமும் இன்னமும் முழுதுங் காண்கிலர்.

ஞானந் தானுரு வாகிய நாயக னியல்பை
யானு நீயுமா யிசைத்துமென் ருலஃ தெளிதோ
மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதுந்
தானுங் காண்கில னின்னமுந் தன்பெருந் தலைமை.

தங்கள் தங்கள் சமய நூல்களையே மெய்யென்று நிறுவும்படி சமயிகள் பலரும் கத்துகின்ற புன் சொல்லைக் கேட்டவர்கள் அவருடைய செயலை அறியமாட்டார்கள்; சுத்த வாதுளம் முதலிய ஆகமங்களை ஆராய்ந்தறிந்தவர்களே ஒரு சிறிது அறிவார். காண்பான், காட்சி, காட்சிப்பொருள், காட்டுவான் என்னும் நான்கும், ஐம்பொறிகளும், இருவினைகளும், காலமும், பயனும், இடமுமாய் நின்றார் அக்கடவுள். "நாம் பரம்பொருள்" என்று கூறுகின்ற பிரம விட்டுணுக்களாகிய இருவரும் மாயை யுட்பட்டவராவர். முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து அப்பாற்பட்டு நிற்கின்ற தனி முதல்வர் அக்கடவுளன்றி வேறு யாவர்? மண்முதல் சுத்த மாயை யீருகவுள்ள அண்டங்களும் அங்குள்ள உயிர்களும் உயிரில் பொருளுமாகியு நின்ருர். அவருடைய மாயையை யாவர் கடந்தவர்? வேதங்களும் மயங்கும். இத்தன்மையினராகிய முழு முதற் கடவுளைப் பாலகன் என்று இகழ்ந்தனை. அவுணர் குல முழுவதும் கொன்று உன்னையும் ஒரு கணப்பொழுதிற் கொல்லுவார். அவர் தம்முடைய பேருருட்டிறத்தைக் காட்டும்படி போர் செய்ய எழுந்தருளி வந்தார். பிருதிவியண்டத்தில் 1008 அண்டங்களைப் பெற்றேம்" என்று வியந்தாய். தத்துவபேத முழுவதையும் உணர்ந்திலை, இப்பிருதிவி யண்டங்களோ அளவில்லாதன. மற்றைத் தத்துவங்களிலுள்ள அண்டங்களைக் கேட்டாயாயின் மருளுவை. "அப்பு அண்டம் முதல் சுத்தமாயை தத்துவ அண்டம் ஈருக அளவில்லாத அண்டங்கள் உள்ளன" என்று அறிஞர் கூறுவர். ஒவ்வோரண்டங்களினு முள்ள புவனங்களின் பெருமையை யாவர் அறிந்தார். அளவிடப்படாத பொருளுக்கு ஓரளவு சொல்ல முடியுமோ? இத்தன்மையினவாகிய அண்டங்கள் அனந்த கோடியையும் தம்முடைய வல்லமையினுல் ஓரிமைப் பொழுதில் உண்டாக்கவும் பின்னர் அழிக்கவும் வல்ல ஒப்பில்லாத முதற்கடவுளாகிய சிவபெருமானே உன்னோடு போர்செய்ய வேண்

டும் என்னுந் திருவிளையாடலாற் செந்திப் பதியில் வந்து வீற்றிருக்கின்றார். "ஒப்பில்லாத வச்சிர யாக்கையைப் பெற்றோம்" என்று மதித்தாய். இதனை விடுதி. இருவினைக் கிடாக உடம்பெடுத்துப் பிறக்கும் உயிர்களெல்லாம் இறக்கும். நீயா அழிவுறாதிருப்பாய். மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் பிறந்தவர்களுடைய எந்தப் பெருமை பெற்ற உடம்பும் அழியும். இது நிச்சயம். உனது பெருமிதமுடைய வச்சிர யாக்கையும் மண் சம்பந்தமுடையது; ஆகலால் அழியா திருக்குமா? "அழியா வரத்தைப் பெற்றேம்" என்று கூறினை. அதற்குப் பொருளைக் கேட்குதி. மூவுலகங்களிற் பொருந்திய மற்றை யுயிர்களைப் போலச் சில நாள்களில் அழியாது மிக நெடு நாள் உயிரோடிருக்குந் தன்மை என்றே அறிகுதி. அச்சுதன் (அழியாதவன்) அபன் (பிறவாதவன்) அமரர் (இறவாதவர்) என்னும் பெயர்கள் முறையே, திருமால், பிரமா, தேவர்கள் ஆகிய இவர்களுக்கு உபசாரமாயிருத்தல் போல, உன்னுடைய வச்சிர யாக்கையும் அழியா வரமும் பல யுக காலம் அழியா திருத்தலாய் முடியும்.

அச்சு தன்னய னமரரா கியபெய ரவர்க்கு
நிச்சயம்படி முகமனே யானபோ னினது
வச்சி ரத்தனி யாக்கையு மழிவிலா வரமு
முச்ச கந்தொழப் பல்லுக மிருத்தலாய் முடியும்.

தேவர்களை நீ வருத்துவதை உயிர்க்குயிராகிய சிவபெருமான் திருவுளஞ் செய்து, தாம் ஈந்தருளிய வரத்தைத் தாமே தவிர்ப்பாராயின், "என் செய்தீர்?" என்று வினவி, "இவ்வாறு செய்தல் தகாது" என்று அவரை விலக்குவார் ஒருவருளரோ?

வான்செய் தேவரை நீயலக் கின்றதை மதியா
ஊன்செய் கின்றபல் லுயிருக்கு முயிரதா மொருவன்
தான்செய் கின்றதொல் வரத்தினைத் தான்தவிர்த் திடுமேல்
ஏன்செய் தாயென வினவியே மிறுவுவா ரெவரே.

"கெடுதலில்லாத வளங்களோடு நீயும் நின் கிளையும் இறவாமல் வாழுதி" என்று இவைகளைச் சொன்னேன். இப்பொழுதே தேவர்களைச் சிறையினின்றும் நீக்குதி" என்று கூறினன் அறிஞரில் அறிஞனாகிய சிங்கமுகாசுரன்.

(தொடரும்)

உ

ஓம் குஹாய நம :

கற்பு.

(43 - வது பக்கத் தொடர்ச்சி)

நளாயணி

நீர்வளங்கெழு நீர்மையால் நிலவள நிறைந்து
கார்வளம்பெறத் தவழ்தரு கடிமலர்ப் பொழில்கள்
ஏர்வளர்ந்திட செய்மணற் குன்றுகள் இலகச்
சீர்வளர்ந்திடு நாடெனத் திகழ்வது நிடதம்.

நீர்வளம் பொருந்தி யிருப்பதால் நிலவளம் மிகுந்தும், மேகங்கள் இனிது தவழுகின்ற குளிர்ந்த மலர் வனங்கள் சூழப் பெற்றும், அழகிய மணற்குன்றுகள் விளங்கியும், சிறப்புற்று நிடதம் என்கின்ற நாடு விளங்கும். அந் நாட்டில் கற்பும் பொற்பும் ஒருங்கேயுடைய பெண்மணிகள் பலர் இருந்து அறங்களைச் செய்து கொண்டிருப்பர். இத்தகைய நிடத நாட்டிற்குத் தலைநகராக மாவிந்தம் என்ற நகரம் எழில் செய்து கொண்டிருந்தது. அது

வேத வோசையும் வேய்ங்குழ லோசையும் வீணை
நாத வோசையும் நாரியர் நலமுறப்பாடுங்
கீத வோசையும் கிம்புரி யோசையுங் கிளர்ந்து
ஓத வோசையு நாணுற வோங்கு மாநகரம்.

மலர் பறிப்பவரும், மாலைகள் தொடுப்பவரும், ஆலய வழிபாடு செய்பவரும், இனிது பாடுபவரும், பல்கலைகளை யாய்பவரும், அறநெறிகளை எடுத்து விரிவுரை செய்பவரும் அந்நகரில் வாழ்ந்து கொண்டிருந்தார். இன்னும் அடியிற்கண்ட அன்பர்களும் அந்நகரை யலங்கரித்திருந்தார்.

திருந்து கல்வியோர் சிவகதி விரும்புவோர் தெய்வ
மருந்து கண்டெதிர் வாரென மனைதொறு மெய்தும்

விருந்து கண்டுப சரிப்பவர் விரதியர் தானம்
இருந்து வாங்கிடச் சென்று சென் றீபவர் பலரால்.

இத்தகைய மாவிந்த நகரில் அறநெறி வழுவாது நளன் என்னும் மன்னன் அரசு புரிந்து கொண்டிருந்தான். அவன் வாள் வலியாலுந் தோள்வலியாலும் மிக்கவன்; நீதிநெறி வழுவாதவன்; காலில் மன்னர் மணிமுடியாலாகிய வடுவேயன்றி ஏனைய வடு வில்லாதவன்.

கருணை தங்கிய மனத்தினன் மலைக்கடல் கடந்தோன்
அருணலத்தினன் குடிகளுக் காவியே யனையான்
தருண மென்ப தொன்றின்றியே வழங்கிடு தகவோன்
பொருணலம்பெறு மின்சொலன் பொய்ம்மையொன் றறியான்.

அந்த நளமன்னன் ஓர் நாள் மாலைநேரத்தில் நந்தனவனஞ் சென்றான். அங்கே ஓர் தாமரைத் தடாகத்தில் அழகிய பொற் சிறை யன்னத்தைக் கண்டான். அதன் பேருதவியால் விதர்ப்ப தேய மன்னனாகிய வீமராஜனது புதல்வி தமயந்தியை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டான். நளனுந் தமயந்தியும் கருத்தொருமித்து அன்பும் அறனும் உடையாராய், வள்ளியும் வடிவேலிறையும்போல் இனிது வாழ்ந்தார்கள். அவர்கள் வீணையும் ஓசையும் போல் இணைபிரியாது இன்புற்றனர். ஒருநாள்போல் பல நாளும் வாழ்வாராயினர். வளர்பிறை போல் அவர்களிடை அன்பு வளர்ந்துகொண்டே யிருந்தன. இங்ஙனம் வாழுநாளில் அவர்களது தவப்பயனாய் தமயந்தி கருக்கொண்டனள்; உரிய காலத்தில் ஓர் பழிபிறங்காப் பண்புடை மகனைப் பெற்றனள். அக் குழந்தையின் திருமுகத்தைக் கண்ட மன்னன் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தான். நகரமாந்தரும் மகிழ்ந்தார்கள். குழந்தையைத் தொட்டிலிட்டு தாலாட்டி, விதிப்படி இந்திரசேனன் என்று பேரிட்டனர். பாலசூரியனைப்போல் பாலன் இனிது வளர்ந்து வந்தான்.

சிலவெனத்திரு மகன்வளர் வுறக்கரு நேர்ந்து
நலனெலா நிறை நாளினில் நங்கைசெய் தவத்தால்
மலர் மடந்தைபாற் கடலினி லுதித்ததுமான
உலகெலா மகிழ் வெய்திட நளாயணி யுதித்தாள்.

மீண்டுந் தமயந்தி கருவடைந்தனள். அவள் புகழை நிலைநாட்டும் பொருட்டு நல்ல நாளில் பாற்கடலில் பதுமாசனி உதித்ததுபோல் உலகெலாம் உவப்புற ஓர் பெண்மகவு பிறந்தது. அம்மகவைக் கண்டாரனைவரும் அகமகிழ்ந்தனர். புத்தேளிர் பூமாரி பொழிந்தனர். எங்கும் இனிய கீதங்களை யொலித்தனர்; அரம்பையர் நர்த்தனம் புரிந்தனர்; வறிஞருக்கும் புலவருக்கும் கணக்கற்ற நிதியை மன்னன் வழங்கினன். அந்தணர் ஆசிகூறினர், மன்னன்சிறைச்சாலையி லுள்ளாரைவிடுவித்தனன். ஏழு ஆண்டுகள் குடிகள்வரிகொடுக்கவேண்டாமென்றனன். சிற்றரசர் ஐந்துஆண்டுகள் திறைதர வேண்டாமென்று கூறினன். மூன்றுநாள்வரை கருவூலந் திறந்துவைத்து அவரவர்கள் விருப்பப்படி செல்வத்தைக் கொண்டு போகுமாறு செய்தனன். குழந்தைக்கு இந்திரசேனை என்று பேர் சூட்டினன். அக்குழந்தை நளனுடைய மகளானபடியால் நளாயணி எனப்பட்டனள். நளாயணி தாதியர் மடியிலும், தாய் தந்தை தோளிலும், தங்கத் தொட்டிலிலுமாக வளர்ந்து வந்தனள்.

சந்திரனை யழைத்தும், வண்டலாடியும், அறிவுநூல் கற்றும், கழங்கு சதுரங்கம் முதலியன ஆடியும், ஊசலாடியும், நன்கு வளர்ந்து, திருமணப் பருவத்தை யடைந்தனள்.

ஓம் குஹாய நம:

சூரவாதித்தன் கதை

(47-வது பக்கத் தொடர்ச்சி)

திருமண நாளொன்று தக்க சோதிடர்களைக் கொண்டு குறித்து யாவர்க்கும் மண ஓலை அரசன் அனுப்பினான். அரசன் திருமணத்தைக் குறித்துப் பந்தரிட்டும், மாலைகள் நாற்றியும், பனிநீர் ஊற்றியும், கொடி மரம் நாட்டியும், வெண் சுதை தீற்றியும், கதலி, கன்னல், கமுகு இவைகளை நிறுவியும், ஊர் முழுமையும் அலங்கரிக்கப் பட்டது. ஊரெலாங் களிப்பும், கூத்தும், சிறப்பும், செல்வமும். திருமண தினத்தில் நன்முகூர்த்த வேளையில் நாகராஜன் 'என் மகள் காந்திமதியை நினக்கு ஈந்தனன்; பற்றுக' எனக் கூறிக் கரக நீர் வார்த்திடப் பல்லியங்கள் ஆர்த்திடக் காந்திமதியின் திருக் கழுத்தில் சூரவாதித்தன் மங்கல நாண் புனைந்தான். மங்கையர் மங்கலம் பாடினர். அந்தணர் ஆசிகள் கூறினர். காந்திமதியும் அரசனும் ரதியும் மன்மதனும் போல இன்பந் துய்த்தனர். அச் சமயத்திற் காந்திமதி தனது நாயகனை நோக்கி "உங்கள் மாமனாரிடம் சிறந்த சிவலிங்கம் ஒன்றுளது; அது உங்களுக்குக் கிடைத்தால் தேவரும் உங்களுக்குக் கீழ்ப் பட்டவராவர். அத்துணைப் பெருமை வாய்ந்தது அது." எனக் கூறினாள். திருமணம் முடிந்த சில தினங்கள் கழித்துத் தனது ஊருக்குப் போக விடை பெற்றுக் கொள்ள வந்த நாகராஜன் மருமகனை நோக்கி "நான் பாதலஞ் செல்ல விடை தருதி; உனக்கு வேண்டுவதைக் கூறுக; தடையின்றி அளிப்பேன்" என்றான். இவ்வார்த்தையைக் கேட்ட அரசன் மிக மகிழ்ந்து 'உன் பாலுள்ள சிவலிங்கத்தை இன்றே எனக்கு ஈகுதி' என்றனன். இதைக் கேட்ட நாகராஜன் உள்ளங் கலங்கினன். பதில் ஒன்றும் உரைக்க முடியாது மௌனஞ் சாதித்துத் தனது இருக்கைக்குச் சென்று என்றும் உறாத துயருற்று

"என் செய்வேன்! என் இறைவனை விட்டு எவ்வாறு பிரிவேன்?" எனக் கவலை கொண்டு மண்மிசைக் கிடந்தனன். அச் சமயத்து நஞ்சணி கண்டன் திருவருளால் நாகராஜன் சிறுதுயில் கொண்டனன். அப்பொழுது அவன் கனவிற் கடவுள் தோன்றி, "நீ பூஜை செய்யும் இலிங்கம் இரண்டு பட்டு ஈருருவாய்த் திகழும். உனது பூஜைக்கு ஏற்ற ஒன்றை வைத்துக் கொள். மற்றொன்றை மன்னனுக்கு அளித்தி" எனக் கூறி மறைந்தனர். துயில் நீங்கி விழித்தனன் நாக ராஜன், ஒருவாறு வருத்தம் நீங்கினவனாய்த் தான் பூஜை செய்யும் லிங்க மூர்த்தியைப் பார்த்த பொழுது, அது ஈருருவாய்த் திகழ்வதைக் கண்டு அளவிலா அற்புதம் உற்றான். இறைவன் திருவருட் பெருக்கை நினைந்து வியந்து தொழுது ஒருருவைச் சோழனுக் களித்து மற்றொன்றைத் தனது பூஜைக்கு வைத்துக் கொண்டான். நாகராஜனிடம் பெற்ற லிங்க மூர்த்தியைச் சோழன் தனது மனைவி காந்திமதிக்குக் காட்டினன். அதைக் கண்டு மகிழ்ந்த காந்திமதி தனது நாயகனை நோக்கி "ஒருமுறை எனது தாய் கயிலைக்குச் சென்று ஸ்ரீ பார்வதி தேவியை வணங்கிப் போற்றத் தேவி மகிழ்ந்து, "உனக்கு வேண்டுவது உரைத்தி" என, என் தாய், "என்னை ஆண்ட நாயகி! நின்னடிக்கு இடைபறா அன்பு வேண்டும்; அங்ஙனம் வாய்த்த அன்புடன் உனது திருவடிக் கருச்சனை புரிய உனது சோதித் திருவுரு ஒன்றும் வேண்டும். இவையிரண்டும் கிடைக்கப் பெறின் அடிச்சி உய்வேன்" என்றாள். அந்த வாசகங் கேட்டலும் தேவியார் திருவுள மகிழ்ந்து கேட்ட வண்ணமே குறைவிலா அன்பையும், பந்த பாசங்களை நீக்க வல்ல தனது அழகிய திருவுரு ஒன்றையும் எனது தாய்க்கு அருளி, "கதியளிக்கும் இவ் விக்கிரகத்துக்குக் 'காந்திமதி' எனப் பெயர் புனைந்து மறைவிதி வழியே அன்பொடு பூசனை புரிதி; பிரமனுக்கும் திருமாலுக்கும் எய்த ஒண்ணாத பேறு கிடைக்கும்; இவ் வுருவில் யாம் என்றும் நீங்காது மேவுவோம். இவ் வுருவைத் தரிசித்தவர், நினைத்தவர், அருச்சனை புரிந்தவர் யாரும் வினையின் நீங்குவர்; எண்ணிய யாவும் பெறுவர்" எனத் திருவாய் மலர்ந்தருளினர். அங்ஙனம் அருமையிற் கிடைத்த திருவுருவை எனது தாய் அன்பொடு ஏந்திச் சென்று, பாதல உலக

த்தை நண்ணி, 'காந்திமதி' என்னும் திருநாமத்தைத் தேவி திருவுருவத்திற்குச் சூட்டி, அருச்சனை புரிந்து வரு நாளில் கருப்பம் வாய்ந்து பிறந்த எனக்குக் காந்திமதி என்னும் பெயர் வைத்தாள். இப்பொழுது என் பிதா இடமிருந்து உங்களுக்குக் கிடைத்த லிங்க மூர்த்திக்கு அத்தேவியின் திருவுரு மிகப் பொருத்தமாம் ஆதலால் அத் திருவுரு கிடைக்கப் பெறின் நல்ல தலத்தில் அவைகளிரண்டையும் ஸ்தாபித்து வணங்கி நாம் நற்கதி யடையலாம்" என்றாள். இவ் வரலாற்றைக் கேட்ட சோழர் பிரான் மிக மகிழ்ந்து, "என் கண்ணனையாய்! தேவியின் அவ் வருமைத் திருவுருவை நீயே முயற்சி செய்து பெறுவது உசிதம்" என்றனன். காந்திமதியும் அதற்கு உடன்பட்டுத் தாயிடம் சென்று அடி பணிந்தாள். தாயும் தனது அருமை மகளை எடுத்தணைத்து, "உனக்கு என்னிடம் யாது வேண்டும்? கூறுக", என்றாள். அதற்குக் காந்திமதி "அருள் நிறை அன்னாய்! எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம். நீ பூஜை செய்யும் ஒப்பற்ற தேவி திருவுருவைத் தருக" என்றாள். அன்னைங் கேட்டலும், சற்று நேரம் தயங்கி வேறொன்றும் வேண்டாம் என எப் பொருளிலும் ஆசை நீக்கித் தேவியாரின் திருவுருவையே பெற விரும்பிய தன் மகளின் பேரறிவிற்கு உள்ளம் மகிழ்ந்து, "கண்ணே! உன் விருப்பின் படியே எடுத்துக் கொள்க" என்று சொல்லிப் பராசக்தியின் திருவுருவை எடுத்தளித்தாள். காந்திமதி அத் திருவுருவை வாங்கித் தன் கண்ணுற ஒற்றிச் சென்னியில் வைத்துச் சென்று தன் கணவன் கரத்தில் தந்தனள். கணவனும் பொங்கு பேரன்பொடு அத் திருவுருவத்தைப் பெற்று உள்ளம் உவந்தான்.

காந்திமதி அம்மட்டோடு நில்லாது இறைவன் திருவருளால் தன் கைவசத்தில் இருந்த ஆய்மணி லிங்கங்கள் ஐந்தையும் இவை இணையிலாப் பெருமை வாய்ந்தன' எனப் புகன்று தனது நாயகனுக்குத் தந்தனள்.

பின்னர் நாகராஜன் சோழனிடம் விடை பெற்றுப் பாதலம் புகுந்தனன். சோழர் பெருமானும் காந்திமதி எனுந் தனதுதேவி

யோடும் இன்புற்று வாழ்ந்திருந்தான். அங்ஙனம் வாழு நாளில், மாமனரிடமிருந்து கிடைத்த சிவலிங்கத்தையும் மாமியாரிட மிருந்து வந்த பராபரையின் திருவுருவையும் ஓரிடத்தில் ஆலயம் அமைத்துத் தாபிக்க எண்ணினன். அன்று இரவிற் சோழர் பிரா னிடமிருந்த ஆறு லிங்கங்களும் ஒருருவாக ஒன்றுபட்டு அங்ஙனம் ஒன்றுகச் சமைந்த லிங்கம் அடுத்திருந்த வில்வாரணியத்தில் ஒரு வில்வ மரத்தடியிற் சென்று முளைத்துத் திகழ்ந்தது. அப்படி அற் புதத் திருவுருவுடன் தோன்றிய பிரானுக்கு அருகில் சூராவாதித்த னிடமிருந்த பராபரையின் திருவுருவும் உடன் சென்று விண்ணே ரும் அதிசயிப்பவிளங்கிற்று. பொழுதுவிடிந்துசோழன்லிங்கமூர்த்தி களையும் பராபரையின் திருவுருவத்தையும் சேமித்து வைத்திருந்த அறையைத் திறந்து பார்க்க அங்கு ஒருருவையுங் காணுது 'அந்தோ! கெட்டேன்' எனக் கலங்கி, விம்மி விம்மி யழுது, கரை காணுத் துயர்க் கடலுட் பட்டவனுய், அறையைப் பூட்டி வைத்த முத்திரை சிதையாதிருக்கின்றதே' அகக் காப்பும் புறக் காப்பும் சரிவர இருக்கின்றனவே, இவ்வளவு சேமிப்பு இருந்தும் இவ்வுரு வங்களை ஓர் இரவில் யார் கவர்ந்திருக்கக் கூடும், இவ்வுருவங்கள் எங்ஙனம் மறைந்தன! யான் ஏதோ பிழை செய்தேன்; அதனுல் தான் எனையாண்ட நாயகனும் நாயகியும் எனைக் கைவிட்டு மறைந் தனர் என்று தீர்மானித்தவனுய்—

மன்றுளாடு மாமணியே! வானத் தவர்கள் போரேறே!
நன்றுள் வார்தம் அகத் தொளியே! நாளுந் தழையுங் கற்பகமே!
மின்றுள் வானிர் மழை பெயல் போற் கருணை மழைபெய் மேகமே!
இன்று ஏறியப் பிழைத்திலேன் எங்குற் றுயோ! இரங்காயோ!

விடையாய்ச் சுமக்க வல்லானே விழிருன் றடியி னிடுவானே
புடையா யுமையென் றுறைவானே புரங்கோல் வதற்கம் பாவானே
கடையா னிவனென் றெனைநினைந்தோ கைவிட் டனைகட் செவிசூழ்ந்த
இடையாய் சிறியே னுனுலும் இரங்க வேண்டு மினித்தானே

எனப் புலம்பி பொன்வண்ணத் தேவே! புலவர் திலகமே! முழுமுதலே! வேயுறுதோளி பங்கா, நந்தா ஒளியே! சுவை தேனே! பெண்ணேர் பாகா! அரவப் பணியாய்! சூலப் படையாய்! கங் கைச் சடையாய்! வெண்ணீற்றுய்! புரஞ் செற்ற புண்ணியா! மணிகண்டா! மறையின் முதலோ, பேரன்பர் மனமோ, மேலைச்

சிவ புரமோ கருணைப் பிராட்டியுடன் எங்குற்றாய் நின்மலனே?-எனப் பலவாறு சொல்லி ஏங்கினான், விழுந்தான், அயர்ந்தான், உயிர்த்தான். புதையல் கண்ட ஒரு வறிஞன் மீண்டும் அப் புதையலை இழந்தாற் படும் மன நிலையை அடைந்தான். இங்ஙனம் அரசன் புலம்புறு சமயத்தில் அவன் மனைவி காந்திமதி அங்கு வந்து உற்றது உணர்ந்து மயங்கிச் செயலற்று நின்றாள். அது பொழுது அமைச்சர் முதலியோர் பலரும் அங்குற்று இன்னற் கடலுட் பட்டனர். வந்து நின்ற அமைச்சர்களை நோக்கி அரசன், "கண்ணும் உயிரும் எனக்கானீர்! லிங்க மூர்த்திகளும் பிராட்டி திருவுருவும் மறைந்த மாயம் அறிந்திலேன். என்னுடலைத் தீக்கு இரையாக்கினேனில்லை; வாள் கொடு அறுத்தேன் இல்லை; இந்த அரசாட்சியில் இச்சை பூண்டு இருக்கின்றேன். நெறி, குலம், நீதி, அரசு, பறி (பொன்) திரு, பார்வை, பண்பு, பொறி-இவைகளை இழந்தும் வாழ்தல் கூடும். கருணைப் பரமன் அருட் குறியை இழந்து இவ்வுலகில் வாழ்வாரும் உளரோ சொல்லுங்கள். நாடகத்தால் ஈசன் அடியான் போல நடித்த கள்வன் இவன், நீதி வழுவி நின்றதனால் லிங்கச் சுடர்க் குறிகளெல்லாம் இவனை விட்டு அகன்று போயின என்று உலகெலாம் என்னை இனி ஏசுமல்லவா? நான் இனி இவ்வுடற் சுமையைப் பொறுக்க மாட்டேன்" எனக் கூறி அழுங்கப், பக்கத்தில் உள்ள யாவரும் அயர்ந்து சோர்ந்தனர். அச்சமயத்தில் 'உள்ளம் உருகில் உடனாகும்' வில்வவனப் பெருமான் அசரீரியாக "வளவர் குல மணியே! அன்பினுருவே! உன்னைவிட்டு நாம் நீங்கேம், நீங்கேம்; வில்வ வனத்தின் பெருமையை உணராதவனாய் வேறோரிடத்தில் கோயில் அமைத்துப் பிரதிஷ்டை செய நினைத்தாய்; அதனால் அருவமாயிருந்த நாம் ஒருருவாகி வில்வ வனம் புகுந்து வில்வ விருக்ஷத்து நீழலில் இப்போது வீற்றிருக்கின்றோம். பெருமை வாய்ந்த அந்த இடமே எமக்கு மிக விருப்பான இடமாம். நாம் முன்பு கொண்டிருந்த ஐவகை வண்ணங்களை உலகெலாம் அறிய வேண்டிச் சொல்லற்கரிய அந்த ஐந்து நிறங்கள். ஒளி வீசவும், பாதிபட்ட பழந் திருவுருவம் புலப்படுமாறும் இப்போது விளங்குகின்றோம். நீ பூசித்திருந்த காந்திமதி தேவியும் வில்வவனத்துள்ள சிவதீர்த்தத்துக்கு எதிரே விளங்குகின்றாள்.

(தொடரும்)